உரைநடை உலகம்

# இயற்கை
## உ
# நீரின்றி அமையாது உலகு

**நுழையும்முன்**

இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு. உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமைப் புல்வெளிகள், நீர்நிலைகள், வயல்வெளிகள், பசுமையான தோப்புகள் என இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. அவற்றை உரிய வகையில் பயன்படுத்தியும் பாதுகாத்தும் அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பது நமது பொறுப்பு. எனவே, நீர் மேலாண்மையின் தேவையை உணர்ந்தே ஆகவேண்டிய காலகட்டம் இது.

### கருத்தரங்க அழைப்பிதழ்

பள்ளிச் சுற்றுச்சூழல் மன்றத்தின் சார்பில் நடைபெறும் மாணவர் கருத்தரங்கம்

**தலைமை:** மாணவர் **வெண்மதி**

**முன்னிலை:** தமிழாசிரியர் **கலைச்செல்வி**

| கருத்தாளர்கள் | தலைப்புகள் |
|---|---|
| மாணவர் ஆமீனா | நீர் மேலாண்மை |
| மாணவர் முகிலன் | தமிழ் மக்களும் தண்ணீரும் |
| மாணவர் மெர்சி | இன்றைய வாழ்வில் தண்ணீர் |

அனைவரும் வருக!

PRN67

### தலைமையுரை – மாணவர் வெண்மதி

வணக்கத்திற்குரிய தமிழாசிரியர் அவர்களே! இனிய நண்பர்களே! வணக்கம். *வான்சிறப்பு* என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களைப் பாடிய வள்ளுவரையும் *மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்* என்று இயற்கையை வாழ்த்திப் பாடிய இளங்கோவடிகளையும் வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

> **தெரிந்து தெளிவோம்**
>
> அகழி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு, அணை, ஏரி, குளம், ஊருணி, கண்மாய், கேணி – எனப் பல்வேறு பெயர்களில் நீர்நிலைகள் உள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5ஆம் நாள் *உலகச் சுற்றுச்சூழல் நாளாகக்* கொண்டாடப்படுகிறது. இயற்கை வழங்கிய *தண்ணீரின் இன்றியமையாமை* குறித்து எல்லோரும் சிந்திக்கவே இந்த ஏற்பாடு.



9th_Tamil_Pages 001-121.indd 32 12/01/2024 15:01:48